**செய்தி வெளியீடு எண்: 285** **நாள் : 13.06.2016**

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/–**
**உதவித்தொகை வழங்கும் திட்டம்**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 2016–2017 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 01.01.2016 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்தும் ஆண்டு வருவாய் ரூ.36,000/–க்குள் இருக்க வேண்டும். வயது மற்றும் வருமானத்திற்கு உரிய சான்று இணைக்கப்பட வேண்டும். மேலும் தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள் மற்றும் தமிழறிஞர்கள் இரண்டு பேரிடம் தகுதிநிலைச் சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப்பப்படிவம் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.org) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தெரிவு செய்யப்படுபவருக்கு திங்கள் தோறும் ரூ.2000/–, மருத்துவப்படி ரூ.100/– மற்றும் கட்டணமில்லா பேருந்துச் சலுகையும் அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய **கடைசி நாள்.30.9.2016**. விண்ணப்பங்களை பெறுதல் மற்றும் அனுப்ப வேண்டிய முகவரி

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்,**
**தமிழ் வளர்ச்சி இயக்ககம்,**
**தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்**
**தமிழ்ச் சாலை, எழும்பூர்,**
**செ ன்னை–600 008**

**தொலைபேசி எண். 044 – 28190412**
**044 – 28190413**

**தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**